ISSN : 2455-0531

இனம் இனத்தைச் சேரும்!

# இனம்

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 1 இதழ் : 1, மே 2015 Vol. I Issue 1, May 2015









க. ப. அறவாணன் இரா. குணசீலன்

ந. இராஜேந்திரன் ச. முத்துச்செல்வம்

மு. முனீஸ்மூர்த்தி த. சத்தியராஜ் மதிப்புரை

*inam:International Research E Journal Tamil Studies*

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் முமுனீஸ்மூர்த்தி.
முனைவர் தசத்தியராஜ்.

## ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ஆ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (பெருந்துறை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (கோவை)

## வெளியிடுபவர்

முனைவர் தசத்தியராஜ்.
கோவை
9600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2015 மலர் : 1 இதழ் : 1
May 2015 Volume I Issue 1

# உள்ளே ...

**பரிதாபப் பிஎச்.டி.யும் பாவ யு.ஜி.சி.யும்**
முனைவர் க.ப.அறவாணன் 3

**இணையத்தில் கலித்தொகை**
முனைவர் இரா. குணசீலன் 8

**அறநூல்களின் தோற்றத்திற்கான தேவைகளும் காரணமும்**
முனைவர் ந. இராஜேந்திரன் 18

**மீடியம் சிறுகதையில் வறுமைப் புனைவு**
ச. முத்துச்செல்வம் 24

**மலைபடுகடாம் நவிலும் மானுட விழுமியங்கள்**
முனைவர் மு. முனீஸ்மூர்த்தி (அமுதன்) 29

**புதுயுக நூல் வெளியீடு : கலித்தொகைப்பதிப்பும் உரைச்சிறப்பும்**
முனைவர் த. சத்தியராஜ் (நேயக்கோ) 35

**பீச்சி : நூல்மதிப்புரை**
முனைவர் அருவி.தேன்மொழி 47

# பீச்சி : நூல்மதிப்புரை

*முனைவர் அருவி.தேன்மொழி,*
*தமிழ் - உதவிப் பேராசிரியர்,*
*இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி,*
*கோயமுத்தூர்.*



கவிஞர் முனைவர் த.சத்தியராஜ் (நேயக்கோ) அவர்கள் செம்மொழியை வாசித்திருக்கிறார்; உளமாற நேசித்திருக்கிறார். நேசித்ததில் ‘பீச்சி’யைப் பிரசவித்து இருக்கிறார்.

உள்ளத்து உள்ளது கவிதை என்றார் கவிமணி. ஆம்! இவர் உள்ளத்து உள்ளும் தமிழுணர்வு, தாய்மையுணர்வு, சமுதாயுணர்வு, தன் தாய்மண்ணுணர்வு, கிராமியஉணர்வு எனப் பல கோணங்களில் உணர்வுகள் இருந்திருக்கின்றன. அதன் வெளிப்பாடாக ‘பீச்சி’ என்ற கவிதை நூல் வெளிப்பட்டிருக்கிறது.

கவிஞர் ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கியிருக்கிறார். ஆழமாகச் சிந்தித்தும் இருக்கிறார். அதைக் கவிதையும் ஆக்கி இருக்கிறார். அவற்றில் தனக்கு உருக்கொடுத்த உள்ளங்களை, அவ்வுள்ளங்கள் கடந்த இன்னல்களை, காயங்களைக் கவலையோடு கவிதையாக்கியிருக்கிறார்.

**ஈன்று புறந்தருதல் தாய்க்குக் கடனே!**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!**

என்று இல்லறக் கடமையைக் கூறுவர். இத்தகைய இல்லறக் கடமையைக் கொண்டு வாழும் தன் பெற்றோர்களைப் போற்றியிருக்கிறார்.

**தமிழே எங்களது தளரிலா உயிராகும்**
**தமிழே எங்களது தண்நிகர் மூச்சாகும்**
**தமிழ்! தமிழ்! தமிழெனத் தமிழியம் மொழிந்திடும்**
**தமிழ்மாந்தன் மொழியினிலும் தமிங்கலம் தவழுவதேகாண்!**

என்பன போன்ற கவிதை வரிகளை நோக்கும்போது கவிஞர் தமிழ்மொழியின் நிலை குறித்து மனம் நொந்து பேசியுள்ளது தெரிகிறது.

வாழ்வது தமிழகம். தாய்மொழி தமிழ். பயில்வது தமிழ். பேசுவது தமிழ். ஆனால் கையொப்பம் இடுவதோ கடன் வாங்கி ஆங்கிலத்தில். குழந்தைக்குப் பெயரிடுவதோ நமக்கு, நம் மொழிக்கு இணையில்லா வடமொழியில், வடமொழிக் கலப்பில். கேட்டால் நியூமராலஜி பார்த்துப் பெயர் வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். எங்கே போனது நம்மொழி. நிலையில்லாமல் இருக்கும் ஏட்டில் மட்டும் உள்ளதா? நரம்பில்லாமல் இருக்கும் நம் நாக்கில் மட்டும் உள்ளதா? என்னவாயிற்று தமிழ்மொழியின் நிலை?; நம் செம்மொழியின் நிலை? இதற்குக் காலம் தான் பதில் கூற வேண்டும்.

**உன்னது நற்சுவை உணரும்முன் உனையறியேன்**

**……… ……… ……… ………**

**உன்னை வாசித்திட வாசித்திட**

உன்னருமை கண்டிட வியந்தேனே அம்மா!

என்ற வரிகளில் தன் தமிழன்னையைத் தன் தமிழன்னையின் தமிழ் இன்பத்தை வாசித்து வாசித்துக் கவிஞர் இன்புற்று இருப்பது கண்கூடாகத் தெரிகிறது.

காதலைப் பாடாத கவிஞர் உண்டோ? இவரும் வதிவிலக்கல்ல. தன் மனதில் அமர்ந்த காரிகையை,

இவள்தானே விழியினில் விசைதந்த காரிகையாள்
இவள்தானே நினைகாரி இசைகாரி யானவள்
மனப்பூவில் கலிதேனும் மகிழ வந்தவள்
மனப்பூவில் அமராது மணப்பூவில் அமர்ந்தாளே!
புன்னகைக்கும் மடந்தையே புன்னகையில் சிதைவேனோ
…………
உன்னது கட்டழகில் உளமிறங்கி ஆவேனோ?

என்று காதல்மொழியைப் பாடியிருக்கின்றார்.

சமுதாயத்தில் இன்றைய இளைஞர்களைச் சீரழித்துக் கொண்டிருக்கும் புகைப்பழக்கம் வாழ்வை அழிக்கும் கருவியாக உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

முனைவர் பட்டம் முயன்று பெற்றான்
………………
பரிந்துரை உண்டா பரிந்தது கல்லூரி
பணமும் வேண்டுமே பாரினில் வாழ்ந்திட
……………………

காலம் பார்க்காமல், காசு பார்க்காமல் கற்ற கல்விக்கு மதிப்பில்லை. கல்லாதவன் தரும் பரிந்துரைக்கு மதிப்போ அநேகம். கல்வியின் நிலையும், கற்றவன் நிலையும் எவ்வாறு உள்ளது பாருங்கள் என்றும், வேலைத் தேடி அலையும் இன்றைய இளைஞனின் நிலையும் எவ்வாறு உள்ளது என்பதைப் படம் பிடித்துக்காட்டி குமுறியிருக்கிறார்.

புத்தாடை எடுத்து. இனிப்புகள் செய்து, வெடிகள் வெடித்து தீபாவளி திருநாளைத் தமிழனே திண்டாடி மகிழலாமா? நமது முன்னோர்கள் வழிவழியாகப் போற்றிவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாக்கள், முன்னோர் வழிபாடு, கார்த்திகை தீபவிழா போன்ற விழாக்களைப் போற்றி மகிழ்வதில் தமிழர்கள் ஏனோ ஆர்வம் காட்டுவதில்லை என்பதை,

சுவாசத்தை நிறுத்திடவும் செவியினைச் செவிடாக்கவும்
நராகாசு ரனுவில் நற்தமிழன் வீழ்ந்திட நினையுமந்த
……………….
உன்நலநாள் எதுவென உணர்ந்திடு தமிழாநீ!

உணர்ந்திட உள்ளுகை உறுவாயா மாந்தா?

என்ற கவிதையில் நம் கண்ணை நாமே குத்துவதா? சிந்திக்க வேண்டும். நம் மரபைப் போற்றவேண்டும் என்கிறார் கவிஞர்.

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர். இனி வரும் காலங்களில் நீரின்றித்தான் போகுமோ என்னவோ? அதை,

குடிக்க நீரின்றி கொடுமையில் தவிப்பர்!
குளிப்பர் மிகுநீரில் கொடுமை இதுவே!
நிழலத்தடி நீரும் நேரும் மழைவர!
நிலமும் வேகும் நீள்முகில் இன்மையால்!
குளியல் நீர்வரும் கொடுப்பர் பலநாழி!
குடிநீர் வருமே கொடுப்பர் சின்னாழி!
சாக்கடையில் வீணாயத் தண்ணீர்க் கழியுமே!

என்று கவலைப்பட்டுப் பேசியிருக்கிறார் கவிஞர்.

மிட்டாய் வாங்கலாம். பொம்மை வாங்கலாம் வா என்று தான் தன் குழந்தையை அழைத்துக்கொண்டு வெளியே செல்வர். ஆனால் கவிஞர்,

கைவீசம்மா கைவீசு
நூலகம் போகலாம் நீகைவீசு
நூல்கள் பார்க்கலாம் நீகைவீசு
நூல்கள் தேடலாம் நீகைவீசு
நூல்கள் வாசிக்கலாம் நீகைவீசு
அறிவைப் பெறலாம் ஆம்கைவீசு
புதிய உள்ளுகை பூக்கும் கைவீசு
புதியன புதியன புதுக்கலாமே கைவீசு

தன் குழந்தையைக் கைவீசி அழைத்துக்கொண்டு நூலகத்திற்குச் சென்றிருக்கிறார்.

இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு முதலில் வேண்டப்படுவது கல்விதான் என்பதையும், சிறுவயது முதற்கொண்டே படிக்கும் பழக்கத்தையும், நூலகம் செல்லும் பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் தன் இனிய மகள் தமிழினி போல் உள்ளவர்களுக்கு இனிமையாகக் கூறியிருக்கிறார்.

கவிதைக்குக் கற்பனை அழகூட்டும். இவர் கவிதைக்குத் தன்னைச் சூழ்ந்த உண்மைதான் அழகூட்டியிருக்கிறது. தன்னுடைய தமிழ் நெஞ்சத்தின் செம்மையை, உள்ளக் கொந்தளிப்பைக் கவிஞர் துணிந்தே வெளிப்படுத்தியிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரிகின்றது. இவ்விதம் மிகப்பெரிய பாராட்டுதலுக்குரியது.

கவிஞர் முனைவர் த.சத்தியராஜ் (நேயக்கோ) இதுபோன்று பல படைப்புக்களைப் படைக்கவேண்டும். அது நம் தமிழ்த்தாய்க்கு அணிகலனாக அமையவேண்டும் என்பது என் அவா…